**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 376/2019 PW . 1**

**பெயர் : ராஜ்குமார்** **தந்தை/கணவர் பெயர்: அந்தோணிதாஸ்**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025

---

**(1, 2 எதிரிகள் ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**<u>09.10.2025 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மதுரையில் வேலை தேடி குடியிருந்து வருகிறேன். நான் மணப்புரம் பைனான்ஸ் நிறுவனத்தில் 2010ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரை சிங்கம்புணரி, மேலூர், ஒத்தக்கடை, மதுரை அண்ணநகர், மதுரை கருப்பாயூரணி ஆகிய கிளைகளின் ஏரியா மேனேஜராக பணிபுரிந்தேன். 08.06.2017ம் தேதி தணிக்கையாளர்கள் ஜித்தன் ஜெனார்த்தனன், விஷ்ணு சந்திரன், பழனிவேல்ராஜன் ஆகியோர்கள் சிங்கம்புணரி மணப்புரம் பைனான்ஸ் நிறுவனத்தில் உள்ள அடகுவைக்கப்பட்டிருந்த வாடிக்கையாளர்களின் தங்க நகைகளை கணக்கீட்டு தணிக்கை செய்தார்கள். அப்போது 4 பாக்கெட்டுகளில் வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் எடை மாற்றம் இருந்ததை கண்டறிந்தார்கள். (சாட்சி அடகு வைத்தவர்களின் பெயர் மற்றும் விபரங்களை ஞாபகமில்லை என்பதால் புகாரை பார்த்தால் தான் கூறமுடியும் என்றுசொன்னதால் புகாரை பார்த்து சாட்சியம் அளிக்கிறார்). 4 பாக்கெட்டுகளின் வாடிக்கையாளர்களின் பெயர் ஆஷா, கருப்பாயி, செல்வராஜ், சாகுல்ஹமீது ஆகியோர்கள் அடகு வைத்திருந்த நகைகளின் பாக்கெட்டுகள் ஆகும்.

2. வாடிக்கையாளர் ஆஷா 20.5 கிராம் தங்க நகையை அடகு வைத்திருந்தார். கருப்பாயி 40 கிராம் தங்க நகையை அடகு வைத்திருந்தார். செல்வராஜ் 15.6 கிராம் தங்க நகையை அடகு வைத்திருந்தார். சாகுல் ஹமீது 25.8 கிராம் தங்க நகையை அடகு வைத்திருந்தார். மேற்படி நான்கு பாக்கெட்டுகளிலும் போலி நகைகள் வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. மேற்படி நகைகள் 28.04.2017ம் தேதி தணிக்கையாளராக இருந்த 1வது எதிரி, உதவி மேலாளராக இருந்த 2வது எதிரி ஆகியோர் சேர்ந்து மேலாளர் விடுமுறையில் இருந்ததால் 2வது எதிரி உதவிமேலாளர் என்றஅடிப்படையில் இருவரும் சேர்ந்து அந்த பாக்கெட்டுகளை பிரித்து சரியாக இருக்கிறது என்று கணக்கிட்டு சீல் இட்டு ஒட்டி வைத்தனர். தணிக்கையாளர் நகைகளை தணிக்கை செய்யும் போது தணிக்கை செய்து முடித்துவிட்டு அதன் மேல் Red sticker ஒட்டி நகைகளை உள்ளே வைத்திருந்தார்கள். வழக்கமாக எங்கள் நிறுவனத்தில் நகைகள் தணிக்கையாளரால் கணக்கீடு செய்யும்போது ரெட் ஸ்டிக்கர் ஒட்டி தான் மூடி வைப்பார்கள். மேற்சொன்ன 08.06.2017ம் தேதி தங்கநகைகள் மாற்றி வைக்கப்பட்டதால் அது சம்பந்தமாக Regional Manager சுரேஷ்

அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு பின்னர் Regional Manager சுரேஷ் மற்றும் நான் ஆகியோர் சிங்கம்புணரி மணப்புரம் பைனான்ஸ் நிறுவன கிளைக்கு வந்து கணக்கீடு செய்து பார்த்தோம். அப்போது கிளைமேலாளர் பாலகுரு மற்றும் உதவிமேலாளர் சதீஸ் ஆகியோரிடம் விசாரணை செய்ததில் அவர்கள் போலி நகைகளை மாற்றிவைக்கப்பட்ட விபரத்தை சொன்னார்கள்.

3. அதன்பின்னர் நான் சிங்கம்புணரி காவல்நிலையத்தில் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும்ஆவணம் நான் கொடுத்த புகார் தான். அதில் உள்ளது எனது கையொப்பம் தான். **அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 2வது எதிரி 2017 மே மாதம் தன்னிச்சையாக விடுமுறையில் சென்றுவிட்டார். 1வது எதிரியிடம் நான் விசாரித்தபோது சரியாக இருக்கிறது என்று சொன்னார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

3. எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். குவி. இல்லையென தெரிவிக்கப்பட்டதால் கு.வி. முடிக்கப்படுகிறது.